அரசினர் சட்ட முன் வடிவுகள்

(எ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த)
சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1986)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஏ) பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த)
சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை

** 1986ஆம் ஆண்டு மே 14ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.